<u>சார்பு நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்.</u>

முன்னிலை– திருமதி.ச.சரண்யா., எம்.எல்.,

சார்பு நீதிபதி, வந்தவாசி

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02–ம் நாள் செவ்வாய்கிழமை

<u>வழக்கிடை மனு எண்.2/2025 in அசல் வழக்கு எண்.553/2024</u>

1. முருகன்
2. செல்வம்
3. செல்வி ......மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

/எதிர்/

ராமு ..... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 23.07.2025 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.P.கீர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.ஜீவானந்தம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்கள், மனு மற்றும் எதிர் உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்;

**<u>உத்தரவு</u>**

இம்மனு XXXVII, விதி. 3 (VII) –ன் கீழ் இம்மனு சுருக்கு விசாரணை முறை வழக்கை எதிர்நடத்துவதற்கு அனுமதி கோரி மனு செய்வதற்கு ஏற்பட்ட 27 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. 1ம் மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–</u>**

தான் இம்மனுவில் 1ஆம் மனுதாரர் என்றும், அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி என்றும் 2ம் மனுதாரர்/2ம் பிரதிவாதி தனது மகன் என்றும், 3ம் மனுதாரர்/3ம் பிரதிவாதி தனது மகள் என்றும், மேற்படி வழக்கில் தான் பிழைப்பிற்காக வெளியூர் சென்றிருந்த காரணத்தினாலும் தனது அறியாமையின் காரணமாகவும் வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களை உரிய நேரத்தில் தங்களது வழக்கறிஞரை சந்தித்து சுருக்குமுறை விசாரணை வழக்கினை (Order 37 Rule 3) என்ற மனுவினை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது என்றும், இந்த மனுவினை தாக்கல் செய்ய 27 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டதகாவும், மேற்படி காலதாமதத்தை மன்னித்து உத்திரவிட வேண்டியது நியாயமும் அவசியமும் என்றும், இல்லையேல் தங்களுக்கு ஈடு செய்ய முடியாத அளவிற்கு அநேக கஷ்ட நஷ்டங்களும் பணத்தால் ஈடு செய்ய இயலாத அளவு இழப்பும் ஏற்படும் என்றும், எனவே மனுவினை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 27 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள எதிர் உரையின் சுருக்கம்:–</u>**

(3.1) எதிர்மனுதாரர்/வாதி தன்னுடைய எதிருரையில் தான் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக ரூ.1,98,000/– பின்வட்டியுடன் திருப்பி செலுத்த கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி சுருக்கு விசாரணை வழக்கை எதிர்நடத்த மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமத்தை மன்னிக்க கோரி தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றும், குறிப்பிட்டுள்ளனர். 1ம் மனுதாரரின் மனைவி 2, 3 மனுதாரர்களின் தாயாரான ராணி என்பவர் 3ம்

மனுதாரரின் திருமண செலவிற்கு என்று கூறி தான் எதிர்மனுதாரர்/வாதியிடமிருந்து கடந்த 04.01.2024 அன்று ரூ.1,65,000/-த்தை கடனாக பெற்றுக்கு அதை 24 சதவீதம் வட்டி செலுத்துவதாக கூறி கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்ததாகவும் எதிர்மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இவ்வழக்கில் 28.01.2025 அன்று மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டுவிட்டது என்றும் மேற்சொன்ன இவ்வக்காலத்து இந்நீதிமன்றத்தால் 20.02.2025 அன்று பதிவு செய்யப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அன்றை தேதியில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாமல் Notice of Hearaing தனது தரப்பு வழக்கறிஞருக்கு அளிக்கவில்லை என்றும், எனவே மேற்படி காலதாமத்தை மன்னிக்க கோரிய மனு நிலைக்கதக்கதல்ல என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யதக்கது என்றும், எதிர்மனுதாரர்/வாதி குறிப்பிட்டுள்ளார்.

**<u>4. தற்போது இங்கு தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்:-</u>**

**(i) மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ளவாறு 27 நாட்கள் காலதாமதம் மன்னிக்கத்தக்கதா?**

**(ii) உபய மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் எவை?**

**<u>5. தற்போது பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுகிறது:-</u>**

**<u>பிரச்சனை எண்.1</u>**

**மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ளவாறு 27 நாட்கள் காலதாமதம் மன்னிக்கத்தக்கதா?**

(5.1) இம்மனு XXXVII, விதி. 3 (VII) –ன் கீழ் இம்மனு சுருக்கு விசாரணை முறை வழக்கை எதிர்நடத்துவதற்கு அனுமதி கோரி மனு செய்வதற்கு ஏற்பட்ட 27 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்களுடைய மனுவில் தாங்கள் பிழைப்பிற்காக வெளியூர் சென்றிருந்த காரணத்தினாலும் அறியாமையின் காரணத்தினாலும், சம்மந்தப்பட்ட ஆவணங்களை உரிய நேரத்தில் தங்களது வழக்கறிஞரை சந்தித்து கொடுக்க இயலவில்லை என்றும், அதனால் சுருக்கு விசாரணை வழக்கினை எதிர்நடத்த மனு தாக்கல் செய்தவதில் ஏற்பட்ட 27 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டதாகவும், அந்த காலதாமதம் அறியாமையால் ஏற்பட்டது என்றும், அது மன்னிக்கதக்கது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(5.2) எதிர்மனுதாரர்/வாதி தன்னுடைய எதிருரையில் இவ்வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் 28.01.2025 அன்றே வக்காலாத்து தாக்கல் செய்தார்கள் என்றும், அது இந்நீதிமன்றத்தால் 20.02.2025 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால் அதன்பின்னிட்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் தான் நீதிமன்றத்தில் ஆஜராகாவில்லை என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யதக்கது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

(5.3) இம்மனு கட்டளை XXXVII விதி 3 (VII) ன் கீழ் சுருக்குமுறை விசாரணை வழக்கை எதிர்நடத்த அனுமதி கோரி மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமத்தை மன்னிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன சட்டப்பிரிவின் படி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மனு தாக்கல்

செய்வதில் ஏற்பட்ட காலதாமத்திற்கான சரியான காரணங்களை குறிப்பிடும்பட்சத்தில் அவர்களுக்கு மனு தாக்கல் செய்ய அனுமதி வழங்கலாம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மனுவில் மனுதாரர்கள் பிழைப்பிற்காக வெளியூர் சென்ற காரணத்தினாலும், அறியாமையின் காரணத்தினாலும் தான் தங்களால் உரிய நேரத்தில் மனு தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்களது மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும் நீதியின் நலன் கருதியும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சுருக்குமுறை விசாரணை வழக்கை எதிர் நடத்த அனுமதி கோரும் மனுவினை தாக்கல் செய்ய அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே இம்மனுவினை நீதியின் நலன் கருதி அனுமதிக்க என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

<u>**முடிவில்:-**</u>

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்படுகின்றது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2025.09.02 04:24:35 +0530

சார்பு நீதிபதி,
வந்தவாசி.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும்</u>

<u>சான்றாவணங்கள் – இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும்</u>

<u>சான்றாவணங்கள்</u>– இல்லை

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.09.02 04:24:42 +0530

சார்பு நீதிபதி,
வந்தவாசி.